# பெண்ணடிமைப் பதிவுகளும் மீட்டுருவாக்கங்களும்

***முனைவர் சு. செந்தாமரை***
தமிழ் உதவிப் பேராசிரியர்
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்

**மலர்: 4**

**இதழ்: 2**

**மாதம்: அக்டோபர்**

**வருடம்: 2019**

**ISSN: 2454-3993**

## *சுருக்கம்*

*மனிதகுலம் மிருகங்களோடு மிருகங்களாக வாழ்ந்த காலங்களில் ஆண் பெண் என்ற பாகுபாடற்று வலிமைக்கேற்ற உரிமையோடு வாழ்ந்து வந்தது. அடுத்து குழு என்ற அடிப்படையிலும் குடும்பம் என்ற அமைப்பிலும் பெண்கள் சமமாகவே கருதப்பட்டு வந்தனர். முற்காலக் குடும்ப அமைப்பில் பெண்ணுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுத் தாய்வழிச் சமூகத்தில் குடும்பக்க ட்டமைப்புக்கள் உருவாகத் தொடங்கியதும், தந்தைவழிச் சமுதாயத் தின் அதிகாரம் தலைதூக்கியது. இந்தக்காலகட்டம்தான் பெண்களின் சிந்தனைகளுக்கும் செயல்பாடுகளுக்கும் முட்டுக்கட்டை போடப்பட்ட காலம் என்று சொல்லலாம். அடுத்து வீரயுகக்காலங்களிலும் சங்ககாலத்திலும் இலக்கியப்புனைவுகளுக்குப் பின்னால் செயல்படும் அந்தரங்க அரசியலைச் சொல்லலாம். புறஇலக்கியங்களில் ஆண் உடலைக் கொண்டாடுவதும், உடைமைச் சமூகத்தின் தேவைக்கேற்ப அகஇலக்கியங்களில் பெண் உடலை ஒடுக்குவதும் தான் எனப்படுகிறது.*

***முக்கிய வார்த்தைகள்:*** *பெண்ணடிமைப் பதிவுகள் சங்ககாலம் தொட்டு தற்காலம் வரை.*

### அறிமுகம்

சங்க இலக்கியங்களில் செவிலித்தாய் கிளி விரட்டி, தினைப்புனம் காக்கத்தலைவியையும் தோழியையும் அனுப்புகிறாள். அங்கே நிகழும் நிகழ்வில் மழை பொழிகிறது, அருவி கொட்டுகிறது, அருவியாட்டம், சுனைநீர்க்குளியல், புச்சேகரிப்பு விளையாட்டு, எதிர்பாராமல் தலைவனாகிய களிறு கண்டு புணர்ச்சி, காதலெனும் கடுநோய், படர், நல்மணம், குடும்பம் இவ்வாறு காட்சிப்படுத்தப்படுகிறது. குறிஞ்சிப்பாட்டில்,

**நேர்இறை முன்கைபற்றி நுமர்தர,**
***நாடறி நல்மணம் அயர்கம் (231)***

என்ற வரிகளில் தலைவன் தலைவி இணைந்த குடும்ப வாழ்க்கையைக் காணலாம். இத்தகைய குடும்ப அமைப்பு ஆணின் அதிகாரக் கட்டமைப்புக்குள் அடக்கப்படுகிறது.

சமுதாயத்தில் பெண்களின் திறமையும் பங்களிப்பும் அங்கீகரிக்கப்படவில்லை. அவளை அடக்குவதற்கு சக்தியோடும் பிற தெய்வங்களோடும், ஆறு, கடல், மலை போன்ற எல்லாவற்றோடும் ஒப்பிட்டுக்கூறி சிறிதுசிறிதாக அடிமைத்தனத்தினைப் புகுத்தினர் என்பதைக் காட்டுகிறது.

**வரலாற்றுக்கு முந்தைய காலம்**

இக்காலகட்டத்தில் சமுதாயத்தில் பெண்கள் உணவு, உடை போன்ற சமூக உற்பத்தியில் பங்கெடுக்கத் திணிக்கப்பட்டனர். வாரிசுகளை உருவாக்கும் பொறுப்புகள் அதிகமாகிப் பெண்வழிச் சமுதாயத்திற்கு வழிவகுத்தது. காலப்போக்கில் அந்நிலை பெண்களுக்கு எதிராக மாறி ஆண்கள் சொத்துடைமையாளராக மாறினர். ஆண்களின் அதிகாரத்தை வலுக்கட்டாயமாக அங்கீகரித்துப் பெண்கள் இரண்டாந்தர நிலையில் கொண்டு நடத்தப்பட்டனர். இதுபோன்ற நிலையைப் பிற்காலத்தில் நிரந்தரமாக வலியுறுத்தி நின்ற மதங்களும் வேதங்களும் வேதகாலத்திற்குப் பின் தோன்றிய இலக்கியங்களும் தத்துவங்களும் தர்ம சாஸ்த்திரங்களும் ஆணுக்கு அடங்கிய மனித இனமாகவே வைத்துப் பார்க்கத்தொடங்கின.

பழைமையான வேதகாலத்தில் பெண்கள் ஓரளவு ஆண்களுக்கு நிகராக வைத்து எண்ணப்பட்டனர் என்பதை இல. திலகவதி எழுதிய பெண் வரலாறும் விடுதலைக்கான போராட்டமும் என்ற வரலாற்று நாவல் பதிவு செய்துள்ளது. வேதங்களில் முதன்மையான ருக்வேதத்தில் (கி.மு.1500 900 வரை) ஈரினமும் ஓரளவு சமமாக வைத்து எண்ணப்பட்டு வந்ததை ஆரியர்களின் சமூகப் பொருளாதார அரசியல் நிலைமையைக் கொண்டு அறியலாம். விசுவாவரா, கோஷா, அபலா, லோபமுத்ரா, சுர்யா, யமி, இந்திராணி, சர்ப்பரஜனி, ஊர்வசி போன்றோர் ருக்வேதகாலப் பெண்கவிஞர்கள் என்பது பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பு உள்ளது (ப.43) பிற்கால வேதகாலத்தில் (கி.மு.800 கி.மு. 600) பிராமணங்கள், உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் தோன்றின. அன்றைய பிராமண சமூகம் இருபெரும் பிரிவுகளாக இருந்ததாகக் கூறுகின்றனர். அவை, 1. சதபத பிராமணம், 2. ஐத்ரேய பிராமணம்.

சதபத பிராமணத்தில் பெண்கள் இல்லாமல் ஆண்கள் முழுமை அடையமுடியாது என்றும், திருமணம் செய்துகொள்ளாத ஆண் சடங்காச்சாரங்கள், யாகங்கள் போன்றவற்றை நடத்தமுடியாது என்று கூறுகிறது. ஆனால் சொத்துரிமை என்று வரும்போது தகப்பனிடமும், கணவனிடமும் மட்டுமே குடிகொண்டிருந்தது. ஐத்ரேய பிராமணத்தில் பெண்களின் பிறப்பு பாவமாகக் கருதப்பட்டது. பெண்களைக் குடும்பத் துன்பங்களின் பிறப்பிடம், குடும்பத்தின் சுமை என்று கருதப்பட்டது. அப்போதே ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி என்ற வரையறை உருவானது. பெண்களைச் சமுதாய முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தி முக்கியப் பங்காற்றச் செய்தார்களே ஒழிய ஆண்களைப்போன்று அதிகாரம், ஆதிக்கம் பெற்றவர்களாக இருக்கவிடவில்லை. அவர்களுக்குண்டான வேலையாக விவசாயத்தில் ஈடுபடுவது, துணி, வில், அம்பு மற்றும் குடும்பத்திற்குத் தேவையான உபகரணங்கள் போன்ற கருவிகளைத் தயாரித்தல் போன்றவற்றில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். மேலும் வேதகாலத்தில் அரசியல் நெருக்கடிக்குப் பல சக்தி வாய்ந்த வீரர்கள் தேவைப்பட்டதால் ஒருபெண் எட்டிலிருந்து பத்து மகன்களை ஈன்றெடுக்கப் பணிக்கப்பட்டனர். இச்சமயம் சதி என்னும் வழக்கை நிராகரித்தும், விதவை மறுமணத்தை ஆதரித்தும்கூட வந்திருக்கிறார்கள்.

**சங்ககாலம்: (கி.மு.500 கி.மு. 300)**

சங்ககாலம் பெண்களின்மீது அக்கரை கொண்ட காலமாகத் திகழ்ந்துள்ளது. பெண்பாற்புலவர்கள் பலர் இருந்தள்ளனர். சங்கஇலக்கிய அட்டவணை தயாரித்த ந.சஞ்சீவி பெண்பாற்புலவர்கள் 25 பேர் என்றும், உ.வே.சா.- 38 பேர் என்றும், எஸ்.வையாபுரிபிள்ளை 30 பேர் என்றும், புலவர் க.கோவிந்தன் 27 பேர் என்றும், ஔவை துரைசாமிபிள்ளை -34 பேர் என்றும், பெண்பாற் புலவர்களின் பாடல்களை முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்த அவ்வை நடராசன் 41 பேர் என்றும் கூறுவர். இவர் தன் பதிப்பில் 181 கவிதைகள் பெண்களால் எழுதப்பட்டது என்பர். தமிழர்களிடையே சங்க காலத்தில் பெண்களின் நிலை ஆண்களைவிடக் குறைந்ததாக இருந்தாலும் அவர்கள் பழைய கிரேக்க, சீன நாட்டினரைப்போன்று அடிமைகளாக விற்கப்படுவது குறித்து யாதொரு செய்தியுமில்லை (பெண் வரலாறும் விடுதலைக்கான போராட்டமும் ப. 71). ஆணின் கட்டுப்பாட்டில் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கக் கூடியவர்களாக இருந்தனர். சொத்துரிமை இவர்களுக்கு இல்லைதான். இருப்பினும் பெண்களையே சொத்துக்கள் போன்று பாவித்து வந்துள்ளனர். அதற்கு எடுத்துக்காட்டாக சங்கஇலக்கியமாகிய ஐங்குறுநூற்றில்,

**குன்றக்குறவன் கடவுட் பேணி**
**இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்**
**(ஐங்.257)**

என்ற பாடல் உணர்த்தி நிற்கிறது.

**தேவதாசி முறை**

பல்லவர் காலத்தை, தமிழக வைதிக இந்து மதத்தின் பொற்காலம் என்பர். ஆண்களின் அதிகாரம் அதிகமாகத் தலைதூக்கிய காலம் இச்சமயத்தில்தான் பெண்களைக் கோயில்களிலும் திருவிழாக்களிலும் நடனமாடவும், கோயிலைத் தூய்மைப்படுத்தவும் தேவரடியார், தளிச்சேரிப்பெண்டுகள், அடிகள்மார் மற்றும் குட்டி என்று அழைக்கப்பட்டுப் பயன்படுத்தினர். காஞ்சிபுரத்தில் உள்ள முத்தீஸ்வரன் கோயில் சான்றுகள் இதனை விளக்கி நிற்கின்றன. (Annual Reports of Epigraphy – vol – IVP.827) இந்த வழக்கம் கி.பி.3 ஆம் நூற்றாண்டுக்குப் பின்தான் வெளிப்படையாகத் தெரிந்துள்ளது. காளிதாசர் உஜ்ஜயினில் உள்ள மகாகலா கோயிலில் மாலை வேளையில் நடனமங்கைகள் இருந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

விஜய நகரப்பேரரசு காலத்தில் விலைமாதரிடமிருந்து வரி வசூல் செய்யப்பட்டது என்றும், திருமலைநாயக்கர் காலத்தில் பெண் குழந்தைகளைக் கோயிலுக்குப் பொட்டுக்கட்டிவிடும் வழக்கம் அதிகமாக இருந்தது. அக்காலத்தில் தேவரடியார் பாதங்களில் சூடுபோடும் வழக்கம் இருந்ததாகக் குறிப்பு உள்ளது. (Rajkumar Pruti-Status and Position of Women-P.80) இதனை ஒழிக்க தேவதாசிமுறை ஒழிப்புச்சட்டம் 1947 இல் சட்ட எண் 39 இன் அடிப்படையில் இந்திய அரசு கொண்டுவந்தது. பல்லவர் காலத்தை, தமிழக இந்துமதத்தின் பொற்காலம் என்பர். ஆண்களின் அதிகாரம் அதிகமாகத் தலை தூக்கிய காலம் அது.

**இடைக்காலம்**

இடைக்காலத்தில் கி.பி. 1044 இல் முதலாம் இராசேந்திர சோழன் இறந்தவுடன் அவன் மனைவி வீரமாதேவி சதி மேற்கொண்டார். இராஜராஜ மலையகுல அரசனின் மறைவுக்குப் பிறகு அவன் மனைவியும் சதி மேற்கொண்டார். (V.R.Ramachandra Dhikshither – Kulothunga Chola III-P.96) பெண்களை மனிதநேயமற்ற முறையில்அடிமைப்படுத்திவைத்திருந்தனர்

என்பதற்குச் சான்றாக கி.பி. 1175 இல் இரண்டாம் இராஜராஜனின் ஆட்சிக் காலத்தில் நான்கு பெண்கள் 700 காசுகளுக்கு திருவாலங்காடு கோவிலுக்கு விற்கப்பட்டதாகக் குறிப்பு உள்ளது. (மேலது) மேலும் வெற்றி பெற்ற அரசர்களுக்குப் பெண்களைப் பரிசாகக் கொடுக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றன. இவ்வாறு வேதகாலத்திலும் சங்க காலத்திலும் இல்லாத பெண்ணடிமைத்தனம் இடைக்காலத்தில் இருந்துள்ளதை அறியலாம்.

**வரதட்சணை**

பொதுவாகப் பொருளாதாரத்தில் உயர்ந்து விளங்கிய பெண்கள் ஓரளவு சுதந்திரம் பெற்றவர்களாகவே இருந்திருக்கின்றனர். செல்வந்தர் வீட்டுப் பெண்கள் ஆபரணங்களும் அசையாச் சொத்துக்களும் வைத்திருந்தனர். இந்நிலையில் இஸ்லாமியத் திருமணங்களில் டோவர் அல்லது மெஹர் என்ற வரதட்சணை வழக்கம் இருந்தது. இது இல்லாமல் திருமணம் மதச் சட்டப்படிச் செல்லுபடியாகாது. அதாவது டோவர் என்பது மணமகனின் வசதிக்கேற்ப மணமகளுக்குக் கொடுப்பது. ஜஹாங்கிர் மெகருண்ணிஷாவைத் திருமணம் செய்யும் போது 7 கோடியே 20 லட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் கொடுத்ததாகவும், ஷாஜகான் அஞ்ஜுமன் பேகத்தைத் திருமணம் செய்யும்போது ரூ5 லட்சம் டோவர் தொகையாகக் கொடுத்ததாகவும், ஔரங்கசீப் தில்ராஸ் பேகத்தைத் திருமணம் மணம் முடிக்கும்போது ரூ4 லட்சம் மெஹர் தொகையாகக் கொடுத்ததாகவும் பதிவுகள் உள்ளன. இது அக்காலத்து இராஜ வம்சத்தில் பெருமையாகக் கருதப்பட்டது. இச்செயல் அப்பெண்களுக்குப் பொருளாதாரத்தில் உரிய பாதுகாப்பாக விளங்கியது. இந்நிலை மாறி பிற்காலத்தில் இச்சமூகப் பொருளாதாரப் பழக்கமானது மெல்லமெல்ல மாறி வரதட்சணை என்னும் பயங்கரக் கொடுமையை நோக்கி இச்சமுதாயத்தை வலுக்கட்டாயமாக இழுத்துச்சென்றது.

**பெண் சிசுக்கொலை**

இந்தியாவின் பல பகுதிகளில் பெண்குழந்தைகள் பிறந்தவுடன் கொல்லும் வழக்கம் இருந்து வந்துள்ளது. வடஇந்தியாவில் சுஜீல ராஜபுத்திரப் பிரிவுகளில் பெண்குழந்தைகள் பிறந்தவடன் கொல்லப்பட்டனர். கிராமம், நகரம் என்ற எந்தவிதப் பாகுபாடுமின்றி சிசுக்கொலைகள் நடந்துள்ளன. இக்கொடுமையைப் பெரும்பாலும் அதன் உறவினர்களே புரிந்து வந்துள்ளனர். இவ்வழக்கத்தை அவர்கள் கடைபிடித்து வந்ததால் அவர்களை மட்டும் குறைகூறுவது தவறு. ஒரு பெண்குழந்தை பிறந்து வளர்ந்து தன் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பலதரப்பட்ட துன்பங்களை அனுபவித்துச் சித்தரவதைக்கு உள்ளாவதைவிட, அக்குழந்தை பிறந்தவுடன் கொன்றுவிடுவதே அவள் வாழ்க்கைப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என்று கருதியே இம்முறையைக் கையாண்டு வந்தனர். பெண்களின் உயிருக்கும், வாழ்க்கைக்கும் இருந்த மதிப்பற்ற நிலையை இவ்வாறான வழக்கங்கள் காட்டுகின்றன. பெண்சிசுக் கொலைகள் இந்தியாவின் பெரும்பாலான இடங்களில் சர்வ சாதாரணமாக நடைபெற்று வந்துள்ளதைப் பார்க்கும்போது, பெண்ணானவள் இச்சமுதாயத்தில் ஆண்களுக்குத் தேவையான அளவுமட்டும் இருந்தால் போதும். பெண்ணினம் அதிகமாகிவிட்டால் அவர்களை அடக்குவதும் ஆணின் தேவைகள் பூர்த்தியாவதும் நடவாத காரியாமாகிவிடும். ஒரு குறிப்பிட்ட சதவீதத்திற்கு மேல் பெண்கள் விழுக்காடு உயராமல் இருக்க இச்சமூகம் மிகமிக கவனமாகப் பார்த்துக்கொள்கிறது. அரசாங்கமும் பெண்களின் பாதுகாப்பிற்குப் பல சட்டங்கள் கொண்டுவந்தாலும், குற்றம் புரிபவர்களின் தண்டனைகள் எளிதாக இருப்பதால், மேலும் குற்றங்கள் அதிகமாகிக்கொண்டே

செல்கின்றனவே ஒழிய குறைந்தபாடில்லை. ஆகவே பெண்களின் வாழ்க்கைச் சீர்கேடுகளின் காரணங்களை ஆராய்ந்து அவற்றைச் சீர்படுத்த முனையாமல் பெண் சிசுக்கொலையை மட்டும் தடைசெய்வது பயனற்றுப்போகு என்பதையே நடைமுறை சுட்டிக்காட்டுகின்றது.

**பலதாரமணம்**

சங்க இலக்கியங்களிலேயே பலதாரமணம் நிருபணம்ஆகியுள்ளது. ஒரு தலைவனுக்குத் தலைவி மட்டுமல்லாமல் இல்பரத்தை, காமக்கிழத்தி, காதற்பரத்தை, பரத்தை, சேரிப்பரத்தை என பெண்களைப் பலவாறாக வகைப்படுத்தி வைத்திருந்தமை சங்க இலக்கியப் பனுவல்களின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. மார்க்கோபோலோ தனது பயணக்குறிப்பில் பிற்காலப் பாண்டியமன்னன் ஒருவனுக்கு 500 மனைவிகள் இருந்தனர் என்றும் அவன் செல்லுமிடமெல்லாம் அழகிய பெண்களைக் கண்டால் மனைவியாக்கிக் கொள்வதும், தனது அதிகாரத்தைப் பயன்படுத்தித் தன் தம்பியின் மனைவியையே தன் மனைவியாக்கிக் கொண்டான் என்பதையும் குறிப்பிட்டுள்ளார். தற்காலத்திலும் பல இடங்களில் இம்முறையைக் காணமுடிகிறது. வங்காளத்தில் கூலின் என்ற அந்தணவகுப்பைச் சார்ந்த ஆண்கள் நூற்றுக்கணக்கான பெண்களை மணந்தனர். நிலவுடைமைச் சமுதாயத்தில் குடும்ப நிலங்களில் வேலை செய்ய அதிகளவில் ஆட்கள் தேவைப் பட்டனர். இத்தகைய குடும்பத்தில் மணம் முடித்துநுழையும் பெண் தன் வாழ்க்கையின் ஆதாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள ஒரு குழந்தையாவது பெறுவது மிகமிக முக்கியம். ஆண்கள் மலட்டு நிலையில் இருந்தாலும் குழந்தைப்பேறின்மையால் பெண்களே மலடி என்ற பட்டத்தைச் சுமக்க நேரிடுகிறது. மனைவி தாய்மை அடையாத நிலையில் கணவன் வேறொரு பெண்ணைத் திருமணம் முடிக்க உரிமை பெறுகிறான். ஐங்குறுநூற்றில்,

**பெறுங்கடற் கரையது சிறுவெண் காக்கை**
**ஒள்இணர் ஞாழல் முனையின் பொதியவிழ்**
**புன்னைஅம் புஞ்சினைச் சேக்கும் துறைவன்**

**(169)**

என்ற பாடலில் பரத்தையர் சிறுமிகளை ஆண் சிதைத்ததைப் பற்றி விளக்குகிறது. இவ்வாறு பெண்கள் ஆண்களுக்கு அடிமைகளாகவே இருந்துள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

**பெண்களை கேலிசெய்தல்**

தற்காலச் சமூகத்தில் மலிந்து கிடக்கும் ஒரு நிகழ்வு பெண்களைக் கேலி செய்வதாகும். ஆனால் காவிய காலத்திலேயே இறை பத்தினி என்று எல்லோராலும் வணங்கப்படும் சீதாதேவிக்கே இச்சம்பவம் (ஈவ்டீசிங்) நடந்துள்ளதாக கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

**ஏகவாளி அவ்இந்திரன் செம்மல் மேல்**
**போகஏவி அதுன் பொடித்த நாள்**
**காகம்முற்றும் ஓர் கண்இல ஆகிய**
**வேக வென்றியைத் தன் தலைமேல் கொள்வாள்,**

**(பா. எண் 28)**

அதாவது, சித்திரகூடப் பருவதப் பிரதேசத்திலே பெருமாலும் பிராட்டியும் ஏகாந்தமாயிருக்கச் செய்தே, இந்திரன் மகனான ஜயந்தன், தமோகுணத்தாலே விவேக சுனியனாய், தேவ வேஷத்தை மறைத்து, காகவேஷத்தைப் பூண்டுகொண்டு வந்து, பெருமாளும் மடியிலே பள்ளிகொண்டருளா நிற்கச்செய்தே, தாயென்றும் அறியாதே, பிராட்டியாரது திருமார்பிலே குத்த, அவ்வளவிலே பெருமாள் உணர்ந்தருளி அதிகோபிஷ்டராய் ஒரு தர்ப்பத்தையெடுத்து அதில் பிரமாஸ்த்திரத்தை யோஜித்து அதனை அந்தக் காகத்தின்மேலே செலுத்திவிட, அந்த அஸ்த்திரம் மந்திரகதியாக விடப்படுகையாலே பின்தொடர்ந்து செல்ல, அதனைத் தப்ப வழிதேடி முந்துறத் தகப்பனிடஞ்

சென்றவளவில், அவர் முதல் அனைவராலும் கைவிடப்பட்டுகிருபையால் பெருமாளால், ஒருகண் இழந்துவந்த வரலாறு கூறுகிறது (வை.மு சடகோப ராமாநுஜாசார்யர், சுந்தரகாண்டம், ப. 306). இங்கு இந்திரன் மகன் சயந்தன் காகத்தின் வடிவில் வந்து சீதையின் மார்பைத் தீண்டிச்சென்றான் என்ற கம்பனின் கற்பனை, தெய்வகுலப் பெண்ணாக இருந்தாலும் ஆண்களின் காமத்திற்கு அடிமையாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறியிருப்பதைக் காணும்போது, அக்காலத்திலேயும் இத்தகைய கொடுமைகள் இருந்திருப்பதைக் கம்பனின் வாயிலாக உணரமுடிகிறது. இந்த இடத்தில் ஆணாதிக்கத்தைச் சுட்டிக்காட்டும் கம்பனை நாம் போற்றாமல் இருக்கமுடியாது. பாரதி குறிப்பிட்டது போல, ஆதிப்பரம்பொருளின் ஊக்கம், அதை அன்னை எனப்பணிதல் ஆக்கம் என்பது போன்று சிந்திக்கக் கூடியவர்கள் பண்டைக்காலந்தொட்டு இருந்திருக்கவில்லை.

**முடிவுரை**

தற்காலத்தில் பெண்ணியலாளர்களின் போராட்டமெல்லாம் மேற்கண்டவைகளைக் களைவது மட்டுமன்றி, மொழியின் பயன்பாட்டைப் பரவலாக்குவதும், மொழியாலும் கலாச்சாரத்தாலும் கட்டுண்டு சிதறிக் கிடக்கும் பெண்களின் அங்கங்களை மீட்டெடுப்பதும்தான். மேலும் பெண்களுக்கு விதிக்கப்பட்ட அடிமைத்தனத்திலிருந்து அவளின் அதிகாரத்தையும், உரிமையையும் அவளுக்கே உரியதாக ஆக்கவேண்டும். திறனாய்வாளர் கோவை ஞானி குறிப்பிட்டது போல, அடிப்படையில் பெண்ணியம் என்பது இன்றைய உலகின் உய்வுக்கான மெய்யியல். உலகைப் புதியதாகப் படைப்பதற்கான சிந்தனைக் களம் என்ற பொருண்மை நோக்கத்தக்கது. ஈ.வெ.ரா. பெரியார், பெண் ஏன் அடிமையானாள்? என்ற தம் படைப்பில், உலகில் ஆண்மை நிற்கும் வரையில் பெண்கள் அடிமையும் வளர்ந்தே வரும். பெண்களால் ஆண்மை என்ற தத்துவம் அழிக்கப்பட்டால்தான் பெண்களுக்கு விடுதலை என்பது உறுதி என்ற கருத்தைப் பெண்ணியலாளர்கள் தங்கள் கையிலெடுத்தே தீரவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.